**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

**முன்னிலை:திருமதி.K.L.பிரியங்கா,பி.ஏ.,பி.எல்.,(Hons)**

**முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.**

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம், ஆனி மாதம் 11ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் நாள் வியாழக்கிழமை

**COS.No.57/2024**

**CNR.No.TNKR03-000903-2022**

M/s.ஸ்ரீ செந்தில் ஆண்டவர் ஆட்டோ பைனான்ஸ், அதன் சார்பாக மேலாண்மை பங்குதாரர் R. பிரபாகரன்S/o. ரத்தினம்,வயது 49, வசிப்பிடம் கதவு எண்.253 ஜவஹர் பஜார்,2nd floor,கரூர் டவுன்,கரூர் தாலுக்கா,கரூர் மாவட்டம்.

...வாதி

**//எதிர்//**

எமர்சன் A.சாமுவேல்ராஜ் உரிமையாளர், M/s.யூனிவர்சல் Retreading கம்பெனி .S/o. ஆபிரகாம்கோவில், வயது 51, வசிப்பிடம் அலுவலகம் பெரியண்ணதேவர் தெரு, பெருமாள்தேவர் நகர், பாண்டியராஜபுரம், மதுரை-16 என்ற முகவரியிலும், மற்றும் கதவு எண். 4/220-நெல்லைவீதி, தாசில்தார் நகர், மதுரை-20 ...பிரதிவாதி

தாவா கடன் தொகையான ரூ.9,75,233/-ஐ பிரதிவாதி பின் வட்டியுடன் வாதிக்கு திருப்பி செலுத்த வேண்டும் என்றும், தாவா செலவு தொகைக்காகவும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

தாவா தாக்கல் செய்த நாட்கள் : 30.08.2022

அதிகார வரம்பிற்கும் நீதிமன்ற கட்டணத்திற்குமான தாவாவின்

மதிப்பு ரூ. 9,75,233 /-

நீதிமன்ற கட்டணம் தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 22 ன் கீழ் ரூ29,257/- செலுத்தப்பட்டுள்ளது.

வழக்கிற்கான வியாஜ்ஜிய மூலம் 17.05.2010 கரூர் டவுன் இந்நீதிமன்ற எல்லைக்குள் அமைந்துள்ளது.

## மதீப்பீட்டு விவரம்

| | |
|---|---|
| Principal Amount due under the suit | |
| simple Mortgage deed dated 17.05.2010 | - Rs. 5,00,000/- |
| Interest for Rs. 5,00,000/- at the rate of 12% per annum from | |
| from01.07.2014 to 31.05.2022 | - Rs. 4,75,233/- |
| | ------------ |
| Total | -Rs.9,75,233/- |
| | ------------ |
| C.F. Paid thereon under sec.33(1) of | |
| Tamil Nadu Court Fees and suits Valuation Act is | -Rs.29,257/- |

இவ்வழக்கானது கடந்த 30.08.2022-ம் தேதியன்று கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் O.S.No. 656/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கரூர், கூடுதல் சார்பு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது. அதன்பின்னிட்டு மாண்புமிகு மாவட்ட நீதிபதி அவர்களின் A.No. 26/2022, Dated:- 12.09.2023 -ம் தேதியன்று பிறப்பித்த உத்தரவின்படி, கரூர், கூடுதல் சார்பு நீதிமன்றத்திலிருந்து இந்த நீதிமன்றத்திற்கு கடந்த 26.03.2024-ம் தேதியன்று மாற்றம் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தில் கடந்த 26.03.2024-ம் தேதியன்று C.O.S. No. 57/2024 ஆக

கோப்பிற்கு எடுக்கப்பட்டு,இந்த வழக்கு இறுதியாக கடந்த 18.06.2026 என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. N.பிரகாஷ் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் K. ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதி ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், அவருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் வழக்குரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்பாணை</u>

1. பிரதிவாதி, வாதிக்கு ரூ.9,75,233/–ஐ செலுத்த வேண்டும் என்று முதல் நிலை தீர்ப்பாணை வழங்கியும், மேற்படி அசல் தொகை ரூ.5,00,000/–க்கு வழக்குரை தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% ஆண்டு வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த வேண்டும் என்று தாவா செலவு தொகையுடன் வாதியின் தாவாவை அனுமதித்தும், அவ்வாறு செலுத்தும் தவறும்பட்சத்தில் நீதிமன்றம் மூலமாக வாதி பரிகாரம் தேடிக்கொள்ள அனுமதியளித்தும், இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

2) இத்தாவா செலவுத் தொகையினை **ரூ.41,669.33/–**யை பிரதிவாதி வாதிக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.

| **செலவுத்தொகை பட்டியல்** | | **வாதி (ரூ.பை.)** |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | - | 29,257/- |
| வக்காலத்து | - | 10 |
| கட்டளை செலவு | - | 100 |
| வழக்கறிஞர் ஊதியம் | - | 41,559.33 |
| **மொத்தம்** | - | **ரூ.41,669.33 /-** |

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் நாள் நாளிடப்பட்ட தீர்ப்பாணையில் இன்று என்னால் கையொப்பம் செய்யப்பட்டும் நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

K L PRIYANGA

Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**